கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 12.03.2025. அ.வ.எண் . 82/2019, வா.சா. 1 சந்திரன். த/பெ, நடராஜன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) தாவா சொத்தும் அதைத் தொட்ட இதர இடங்களும் ஆரம்பத்தில் வாதி நிறுவனத்திற்கும் மற்றும் சுதர்சன் வேம்புட்டி நிறுவனத்திற்கும் பாத்தியப்பட்டது என்றால் இல்லை கம்பெனிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது. சுதர்சன் வேம்புட்டி கம்பெனிக்கு யார் என்றால் அவர் ஒரு இயக்குநர் ஆவார். நான் ஒரு இயக்குநர் மற்றொரு இயக்குநர் சுதர்சன் வேம்புட்டியின் மனைவி சுமி ரங்கராஜ் ஆவார். சொத்துக்கள் அனைத்தும் பொள்ளாச்சி சோழனூர் கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான், மொத்தம் எத்தனை ஏக்கர் வாதி நிறுவனத்திற்காக வாங்கப்பட்டது என்றால் 8.75 ஏக்கர் ஆகும்.

2) மேற்படி வாதி நிறுவனத்தில் ஒய்வு பெற்ற நபர்கள் எங்களிடம் இடத்தை மட்டும் வாங்குவார்களா அல்லது இடத்தை வாங்குபவர்கள் எங்களிடம் தான் கட்டிடம் கட்ட வேண்டுமா என்றால் இடம் வாங்குபவர்கள் எங்களிடம் தான் கட்டிடம் கட்ட வேண்டும். மொத்தம் எத்தனை மனைப்பிரிவுகள் நாங்கள் பிரித்தோம் என்றால் முதல் திட்டத்தில் 65 மனைகளும், 2 ம் திட்டத்தில் 25 மனைப்பிரிவுகளும் பிரித்தோம். மேற்கண்ட 90 மனைப்பிரிவுகளும் விற்பனை செய்யப்பட்டதா என்றால் 90 மனைப்பிரிவுகளில் ஒரு மனைப்பிரிவு மட்டும் பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டது ஆகும் மற்றவை விற்பனைசெய்யப்பட்டுவிட்டது. 89 நபர்கள் வாங்கிய மனைப்பிரிவுகளில் நாங்கள் தான் கட்டிடம் கட்டி கொடுத்தோம் என்றும், வெளி நபர்கள் கட்டவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்/−(R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

3) பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 153/2017

என்ற வழக்கை வாதி நிறுவனமும் சுதர்சன் வேம்புட்டியும் சேர்ந்து ஒரு 13 நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு மேற்படி வழக்கில் உள்ள 11 நபர்கள் வாதி நிறுவனத்தின் மீதும் சுதர்சன் வேம்புட்டி மீதும் 3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ. வ. எ ண். 305/2017 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.மேற்படி வழக்கில் எங்களுக்கு எதிராக ஒரு உறுத்துக்கட்டளை பிறப்பிக்கபட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண். 153/2017 வழக்கானது டிரான்ஸ்பர் செய்யப்பட்டு 3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 167/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4) நாங்கள் தாக்கல் செய்த உறுத்துக்கட்டளை பரிகார வழக்கில் சுதர்சன் வேம்புட்டியும் சேர்த்து வாதியாக வழக்கு தாக்கல் செய்ததற்கு என் ன காரணம் என்றால் முதல் திட்டம் நிறுவனத்திற்கு சொந்தமானது,. 2 வது திட்டம் சுதர்சன் வேம்புட்டிக்கு சொந்தமானது. அதனால் அவ்வாறுவழக்கு தாக்கல் செய்தோம். சுதர்சன் வேம்புட்டிக்கு கிரய ஆவணம் தனிப்பட்ட முறையில் இருந்தது என்றால் சரிதான், 2 வது திட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட கிரய பத்திரங்களில் நிறுவனம் கையொப்பமிட்டதா அல்லது சுதர்சன் வேம்புட்டி கையொப்பம் செய்தாரா என்றால் சுதர்சன் வேம்புட்டி பவர் ஏஜெண்ட்டாக நான் கையெழுத்து செய்தேன்.

5) முதல் திட்டத்தின் பூமியின் அளவு மற்றும் 2 வது திட்டத்தின்

ஒப்பம்/−(R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

பூமியின்அளவு என்ன என்றால் முதல் திட்டம் க.ச.எண்.140/3 ல் ஏக்கர் 4.71 ம் 2 வது திட்டம் க.ச.எண். 140/1 பி மற்றும் 1 சி – ல் ஏக்கர் 4.08 3/4 ஏக்கர் ஆகும். முதல் திட்டத்தில் 65 மனைகளும், 2 வது திட்டடத்தில் அதே அளவு கொண்ட பூமியில் 25 மனைகளும் போடப்பட்டதா என்றால் 2 வது திட்டத்தில் 25 மனைகள் போக மீதி காலியிடமாக உள்ளது. அந்த மீதி காலியிடத்தில் பொது இடமாக பூங்காவும் சாலைகளும் உண்டு என்றால் சரிதான்.

ஒப்பம்/–(R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி